**சுருக்கம்**

சுனாமி – பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் – 2010–11–ஆம் ஆண்டு திட்ட செயலாக்கத்திற்கான நிதி ஒப்பளித்தல் – ரூ.37.12 கோடி விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை

அரசாணை (நிலை) எண்.52 நாள்: 20.05.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041

வைகாசி – 6

படிக்கப்பட்டவை:

1. அரசாணை எண்.119, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 25.08.2005.
2. அரசாணை எண்.99, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–2) துறை, நாள் 13.06.2007.
3. அரசாணை எண்.163, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–2) துறை, நாள் 24.09.2007.
4. அரசாணை எண்.4, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 9.01.2008.
5. அரசாணை எண்.172, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 12.11.2008.
6. அரசாணை எண்.181, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 02.12.2008.
7. அரசாணை எண்.72, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, (சிஜிஎஸ்–III), நாள் 24.07.2009.
8. திட்ட இயக்குநர் (பொறுப்பு), பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் / மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நேர்முகக் கடித எண். 38/பி1/ பிடிடிஸ்எல்பி/2010 நாள் 5.5.2010.

* * * * *

**ஆணை:-**

படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள அரசாணையில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தினை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. கடலோரப் பகுதியில் உள்ள மக்களை தற்சார்புடையவர்களாக ஆக்குவதன் மூலம் அவர்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்குதல் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6

மாவட்டங்களிலுள்ள 114 கடலோர ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. மேலே படிக்கப்பட்டவை 3–ல் உள்ள அரசாணையில் இத்திட்டத்திற்கான பணியாளர்கள் அனுமதித்து ஆணையிடப்பட்டது.

2) படிக்கப்பட்டவை 5–ல் உள்ள அரசாணையில், இத்திட்ட செயலாக்கத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. படிக்கப்பட்டவை 4, 6 மற்றும் 7–ல் உள்ள அரசாணைகளில் கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டக் கூறுகள் | 2007–08 | 2008–09 | 2009–10 | மொத்தம் | செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1 | கடற்கரையோர பகுதியின் வள ஆதார மேலாண்மை | 616.92 | 371.82 | 165.00 | 1153.74 | 177.70 |
| 2 | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள் | 0.00 | 388.15 | 80.00 | 468.15 | 0.00 |
| 3 | வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி | 124.48 | 381.95 | 100.00 | 606.43 | 118.25 |
| 4 | சமுதாய அடிப்படையிலான கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 0.00 | 7.85 | 103.15 | 111.00 | 75.63 |
| 5 | திட்ட மேலாண்மை | 258.04 | 255.27 | 200.00 | 713.31 | 431.23 |

3) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், இத்திட்டம், திட்ட செயலாக்க அலகு மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலகுகளுக்கு பணியாளர்களைப் பணியமர்த்துதல், திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள 30 கிராம கூட்டு மேம்பாட்டு மையங்கள் அமைத்தல், அம்மையப் பணியாளர்களுக்கு குடும்ப அளவிலான அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கான கணக்கெடுப்பு ஆகியவற்றில் போதிய பயிற்சி அளித்தல், அவ்வாறு கணக்கெடுப்பு செய்யப்பட்ட சுய உதவிக்குழுக்களில் ஆற்றல் குறைந்த குழுக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல், மீனவர்களை அவர்கள் பெற்ற கடன் தொகையில் இருந்து விடுவிப்பு செய்தல் (Debt Redemption), கடலோரப் பள்ளிகளுக்கான திட்டத்தில் பேரிடர் தயார் நிலை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த 30500 மாணவர்களுக்கு கல்விப் பயணம் மற்றும் 3305 ஆசிரியர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி அளித்தல் மற்றும் பேரிடர் தயார் நிலை குறித்த குறுந்தகடுகளைப் பயன்படுத்தி கடலோரப் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான பேரிடர் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த புத்தகங்கள் தயாரித்தல், போன்ற மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ள கணிசமான காலம் தேவைப்பட்டுள்ளது என்றும் தற்போது திட்ட நோக்கத்தினை அடைய விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், நடப்பு நிதியாண்டு 2010–11 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**I . கடற்கரையோர பகுதியின் வள ஆதார மேலாண்மை**

- **சமுதாய உட்கட்டமைப்பு:**

  - 114 கடற்கரையோர ஊராட்சிகளில், 680 பணிகளுக்கு ரூ.2645.00 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இதில் ரூ.2400.00 இலட்சம்

திட்டத்தின் பங்களிப்பாகவும், ரூ245.00 இலட்சம் ஊராட்சிகளின் பங்களிப்பாகவும் இருக்கும். நடப்பு நிதியாண்டில் அனைத்து சமுதாய உட்கட்டமைப்பு பணிகள் செய்து முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, திட்ட மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் நிதி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **மீன் வள மேலாண்மை:**
  - கிராம கூட்டு மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற கருத்துப் பட்டறைகளிலிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின்படி மீன் வள மேலாண்மைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்காக முதன்மை துவக்க நிதியாக ரூ.27.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

- **வாழ்வாதார வரைபடம்:**
  - கூட்டு ஆய்வு குழுவின் பரிந்துரையின்படி வாழ்வாதார வரைபடம் தயாரிக்க வள ஆதார மேம்பாட்டு தொண்டு நிறுவனங்கள் பணிக்கப்பட்டுள்ளது. சமுதாய பங்கேற்புடன் ஏழைகள் மற்றும் நலிந்த பிரிவினர் கண்டறியப்படுவர். இதற்கான செலவு ரூ.18.00 இலட்சமாகும்.

- **திட்ட உதவி:**
  - திட்டத்தை செயலாக்கும் தொண்டு நிறுவனங்கள் நிர்வகிக்கும் கிராம கூட்டு மேம்பாட்டு மையங்களுக்கான நிர்வாக செலவு ரூ.121.00 இலட்சமாகும்.

**II. ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்**

- **புதிய முயற்சிக்கான மூலதன நிதி:**
  - சிறு தொழில் வளர்ச்சிக்காக ரூ.360.00 இலட்சம் வங்கிகள் இணைப்பின் மூலம் வழங்கப்படும்.

- **நலிவுற்ற பிரிவினருக்கு காப்பீட்டு வசதி:**
  - சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் மீன் விற்பனை சங்கங்களின் உறுப்பினர்களுக்கு காப்பீடு குறித்த விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்டும். இதற்காக ரூ.56.00 இலட்சம் செலவிடப்படும்.

- **துயர் குறைப்பு நிதி :**
  - மக்களின் பங்கேற்புடன் "துயர் குறைப்பு நிதி" செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும். இந்த ஆண்டில் திட்டத்தின் மொத்த பங்கீடான ரூ.60.00 இலட்சம் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பிரித்தளிக்கப்படும்.

- **காப்பீட்டு திட்டங்களுக்கான பயிற்சி:**
  - பயிற்றுநர்களுக்கு பயிற்சி, சுய உதவிக் குழுக்கள் மற்றும் மீனவ சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சி ரூ.30.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

- **புதிய கண்டுபிடிப்பு முயற்சிக்கான நிதி:**
  - ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான நிதியை அறிமுகம் செய்ய இணை ஆய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்நிதி வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சிறு தொழில் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தப்படும். நடப்பாண்டில் இதற்காக ரூ.36.00 இலட்சத்தினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படும்.

**III. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி**

- **ஆற்றல் குறைந்த குழுக்களுக்கு பயிற்சி:**
  - 1044 ஆற்றல் குறைந்த குழுக்களுக்கு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. மேலும், செயல்படும் 6086 குழுக்களுக்கு புத்துணர்வு / ஊக்குவிப்புப் பயிற்சி ரூ.75.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

- **ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி:**
  - பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஒப்புதல் பெறப்பட்ட அட்டவணையின்படி 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.102.00 இலட்சத்தில் திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படும்.

- **வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகள்:**
  - ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் சந்தை இணைப்புகளுக்கான கருத்துப் பட்டறைகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- **மீன் விற்பனை சங்கங்கள்**
  - ஒரு மீனவர் கூட்டமைப்பும், 17 மீனவ சங்கங்களும், உரிய விற்பனை கட்டமைப்புகளுடன் தொடங்கப்படவுள்ளது. மேலும், இக்கூட்டமைப்புகளின் மீனவர்களைக் கடனிலிருந்து விடுவிப்பதற்கான நிதி வழங்கப்படவுள்ளது. 10 மீன் இறங்குதளங்களும் ஒரு படகு பழுது பார்க்கும் பகுதியும் ஒரு படகுத்துறையும் உருவாக்கப்படவுள்ளது.
  - மேற்கண்ட மீனவ சங்கங்கள், கூட்டமைப்பு, படகுத்துறை, மீன் இறங்குத்தளம் மற்றும் பயிற்சிக்காக ரூ.830.00 இலட்சங்கள் செலவிடப்படும்.

- **சிறு தொழில் வளர்ச்சி**
  - 2010–11 ஆம் ஆண்டில் 2 மாவட்டங்களில் உப தொழில் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. வியாபார மேம்பாட்டுச்சேவை மற்றும் பயிற்றுவிப்பவர்களுக்கான பயிற்சியும் ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்படவுள்ளது.

- **வாழ்க்கைக் கல்வி பயிற்சி: (Vocational Training)**
  - திட்ட மாவட்டங்களிலுள்ள 1000 இளைஞர்களுக்கான வாழ்க்கைக் கல்வி பயிற்சி ரூ.165.00 இலட்சம் மதிப்பீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் அளிக்கப்படும்.

**IV. சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை**

- **கடல் பாதுகாப்பு:**
    - o மீனவர்களின் சாதனங்களின் பாதுகாப்பு, படகுகளின் சொத்து காப்பீடும் முன்னோட்டமாக ரூ.25.00 இலட்சத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

- **கடலோரப் பள்ளிகளுக்கான ஆதரவு:**
    - o கடந்த ஆண்டைப் போலவே அறிவியல் கண்காட்சி, கடலோரப் பள்ளி மாணவர்களுக்காக கல்விச் சுற்றுலா மற்றும் கல்வி, தகவல் குறித்த விவரம் அடங்கிய கையேடு ஆரம்ப பள்ளியிலிருந்து உயர்நிலை கல்வி வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவினத்தில் வழங்கப்படும்.

**V. திட்ட மேலாண்மை**

- தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலகங்களின் அலுவலகச் செலவினங்களுக்கென ரூ.232.00 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், 2010–11ம் ஆண்டின் வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள ரூ.46.55 கோடி ஆகும் என்றும், 2010–11 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ரூ.37.12 கோடி எனவும், மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளுக்கும் திட்ட ஒதுக்கீட்டிற்கும் இடைப்பட்ட வித்தியாசம் ரூ.9.43 கோடி ஏற்கனவே உள்ள நிதியிருப்பிலிருந்து செலவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

5) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், 2010–11 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடான ரூ.37.12 கோடியை விடுவிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இத்தொகையை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு அளிக்க ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு அதிகாரமளிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளளர்.

6) மேலே பத்தி 5–ல் உள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலனை செய்து, ரூ.37.12 கோடி (ரூபாய் முப்பத்தி ஏழு கோடியே பன்னிரெண்டு இலட்சங்கள் மட்டும்) இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டச் செயலாக்கத்திற்காக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–ல் விடுவிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “2515 – ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள் – 800 இதர செலவினம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – PA – பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி ஆணையத்தின் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் தொடர் திட்டம் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (DP Code 251500800 PA 0932) ”.

**8.** மேலே பத்தி **6** ல் விடுவிக்கப்பட்ட தொகையை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பெற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு காசோலையாக வழங்குவதற்கு அரசு ஆணையிடுகிறது.

**9.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் இதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை, ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மாநிலக் கணக்காயர் மற்றும் அரசிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**10.** இவ்வாணை நிதித்துறை அ.சா.கு.எண்.**335**/செயலாளர்(செலவினம்)/**10**, நாள் **14.05.2010**–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை – **32.**
திட்ட இயக்குநர், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன்
கூடிய சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், சென்னை – **32.**
சிறப்புப் பணி அலுவலர் ( பேரிடர் உதவி மற்றும் மறுவாழ்வு), சென்னை – **5.**
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – **15.**
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை– **35.**

<u>நகல்:</u>-
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – **9.**
வருவாய்த்துறை, சென்னை – **9.**
நிதி( ஊரக வளர்ச்சி)த் துறை, சென்னை – **9.**
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை –**9.**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வ.செ(ம)ஒ) துறை, சென்னை–**9.**
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

**2010 – 11** ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள துணை திட்டக் கூறுகளின் விவரங்கள்

| **வ. எண்** | | **நடவடிக்கைகள்** | **தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| I. | | **கடற்கரையோர பகுதியின் வள ஆதார மேலாண்மை** | |
| | **1.** | சமுதாயக் கட்டமைப்பு | **2400.00** |
| | **2.** | மீன் வள ஆதார மேலாண்மை | **27.00** |
| | **3.** | கிராம கூட்டு மையங்களுக்கு திட்ட ஆதரவு | **121.00** |
| | **4.** | வாழ்வாதார வரைபடம் | **18.00** |
| | | **மொத்தம்** | **2566.00** |
| II. | | **ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்** | |
| | **1.** | புதிய முயற்சிக்கான மூலதன நிதி | **360.00** |
| | **2.** | பாதிப்புக்குள்ளாகும் குழுக்களுக்கு காப்பீட்டு வசதி | **56.00** |
| | **3.** | துயர் குறைப்பு நிதி | **60.00** |
| | **4.** | காப்பீட்டு திட்டங்களுக்கான பயிற்சி | **30.00** |
| | **5.** | புதிய கண்டுபிடிப்புகளுக்கான நிதி | **36.00** |
| | | **மொத்தம்** | **542.00** |
| III. | | **வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி** | |
| | **1.** | ஆற்றல் குறைந்த குழுக்களுக்கு பயிற்சி | **75.00** |
| | **2.** | ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி | **102.00** |
| | **3.** | வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் | **25.00** |
| | **4.** | மீன் விற்பனை சங்கங்கள், கூட்டமைப்பு, படகு கட்டும் துறை, மீன் இறக்கு தளங்கள் மற்றும் பயிற்சி | **830.00** |
| | **5.** | சிறு தொழில் வளர்ச்சி | **63.00** |
| | **6.** | வாழ்க்கைக் கல்வி பயிற்சி | **165.00** |
| | | **மொத்தம்** | **1260.00** |
| IV. | | **சமுதாய அடிப்படையிலான கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை** | |
| | **1.** | கடல் பாதுகாப்பு | **25.00** |
| | **2.** | கடலோரப் பள்ளிகளுக்கு உதவி | **30.00** |
| | | **மொத்தம்** | **55.00** |
| **V.** | | **திட்ட மேலாண்மை** | **232.00** |
| | | **மொத்த தொகை** | **4655.00** |

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.